2. அரசினர் தீர்மானங்கள் (தொடர்ச்சி).

(உ) உரிமைக் குழுவிற்கான தேர்தல்.

மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் : உரிமைக் குழு, ப்ரிவிலேஜஸ் கமிட்டி பற்றிய தீர்மானத்தை மதிப்பிற்குரிய கல்வி அமைச்சர் அவர்கள் லீடர் ஆஃப் தி ஹௌஸ் கொண்டு வருவார்கள்.

மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன் : அவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாடு சட்டசபை விதிகளைச் சேர்ந்த 183-வது விதியின்கீழ், 1967-68-ம் நிதியாண்டுக்குரிய உரிமை பற்றிய குழு வின் உறுப்பினர்களாக இருக்கும்படி பன்னிரண்டு உறுப்பினர் களை, மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் நிச்சயிக்கும் தேதியன்று இச்சபை தேர்ந்தெடுக்கும்" என்ற தீர்மானத்தை முன்மொழி கிறேன்.

மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் : மதிப்பிற்குரிய கல்வி அமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள தீர்மானத்தை நிறை வேற்றுவதா இல்லையா என்பது அவை முன் வைக்கப்பட்டுள்ள கேள்வி. இதுபற்றி குரல் வாயிலாக உறுப்பினர்கள் வாக்களிக்க வேண்டும். தீர்மானத்தை நிறைவேற்றலாம் என்று கருதுகிறவர் கள் "ஆம்" என்று கூறுங்கள். ('ஆம்' என்ற குரல்கள்.) எதிர்ப்ப வர்கள் இருந்தால் இல்லை என்று சொல்லுங்கள். 'இல்லை' என்பவர் கள் இல்லை, ஆகவே, மதிப்பிற்குரிய கல்வி அமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள இத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு விட்டதாக அறிவிக்கிறேன்.

3. அறிவிப்புக்கள் (தொடர்ச்சி).

(உ) உரிமைக் குழுவிற்கான தேர்தல்.

மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் : உரிமைக் குழுவிற்குத் தேர்தல் நடத்துவதற்கு ஒற்றை மாற்று வாக்கு முறைப்படி அவைத் தலைவர் வகுத்துள்ள விதிமுறைகளுக்கிணங்க வேட்பாளர் களின் நியமனத்தாள்கள் 23-3-1967, வியாழக்கிழமை காலை 11 மணிக்குள் செயலாளரிடம் சேர்ப்பிக்கப்பட வேண்டும். நியமனத் தாள் வேண்டுவோர் செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். 23—3—1967 வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும். விலகிக் கொள்ள விரும்புகிற வேட்பாளர்கள் 25—3—1967 சனிக் கிழமை 3 மணிக்குள் விலகிக் கொள்ளலாம். நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு அதாவது பன்னிரண்டுக்கு மேற்படுமாயின் 27—3—1967, திங்கட் கிழமை காலை 9 மணிக்கும் பிற்பகல் 1 மணிக்கும் இடையே வாக்கெடுப்பு நடைபெறும்.

2. அரசினர் தீர்மானங்கள் (தொடர்ச்சி).

(எ) பேரவையினர் வசதிக் குழுவிற்கான தேர்தல்.

மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன் : "தமிழ்நாடு சட்ட சபை விதிகளைச் சேர்ந்த 221-வது விதியின்கீழ், 1967-68-ம் நிதியாண்டுக்குரிய பேரவையினர் வசதிக் குழுவின் உறுப்பினர்